## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.17.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுந்தரேஸ்வரன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2025.

A2 died. A1 absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொது மருத்துவ பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருந்து வருகிறேன். நான் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 28.01.2019 அன்று அதிகாலை 12.45 மணியளவில் வில்வின் ரெஷிஸ் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக கொண்டுவந்தார்கள். அவரை விசாரித்தபோது 27.01.2019 அன்று இரவு 11.45 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களால் மாநாடு சோதனை சாவடி அருகில் வைத்து தாக்கியதாக என்னிடம் சொன்னார். நான் அவரை பரிசோதித்தபோது முகத்தில் இடது மற்றும் நடுப்பகுதி, வலது நெற்றிப் பகுதியிலும், தலையின் உச்சிப்பகுதியிலும், பின்தலையின் நடுப்பகுதியிலும் தலையின் இடது பகுதியிலும் பலவிதமான சிதைந்த காயங்கள் இருந்தது. இடது மோதிர விரலில் சிதைந்த காயமும், மூக்கிலிருந்து ரத்தம் வந்த நிலையில் இருந்தார். நான் அவருக்கு முதலுதவி கொடுத்து மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு நான்

வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ 15**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 15 ல் நோயாளியை கொண்டு வந்தவர் பெயர் என்ற காலத்தில் 108 ஆம்புலன்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நோயாளியை உறவினர் யாராவது கொண்டு வந்தால் அவரது பெயரை விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடுவேன் என்றால் சரிதான். அதில் நோயாளி ஆயுதத்தால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. அதில் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருப்பதால் கையால் கூட தாக்கப்பட்டிருக்கலாம் என்றால் கையால் அடித்து கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. நோயாளி சிகிச்சையில் இருக்கும்போது மயக்க நிலையில் இருந்தார் என்றால் சரிதான். அ.சா.ஆ 15 ல் தாக்கிய நபர் அடையாளம் தெரியாத நபர் என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி விபத்து பதிவேட்டு நகல் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.26 18:22:57 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.18.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. தெய்வநாதன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2025.

A2 died. A1 absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் இணை பேராசிரியராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 28.01.2019 அன்று மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அதிகாலை 2.05 மணியளவில் திருச்செந்தூரிலிருந்து அனுப்பப்பட்ட வில்வின் ரெஜிஷ் என்பவர் எங்கள் மருத்துவமனையில் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அப்போது அவர் மிகவும் மோசமான நிலையில் இருந்தார். அவருக்கு உயிர்காப்பு சிகிச்சைகள் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி அதே தேதியில் காலை 11.15 மணியளவில் இறந்துவிட்டார். அவருக்கு தலையிலும், முகத்திலும் நிறைய காங்கள் இருந்தது. அவருக்கு சுயநினைவின்றி இருந்தார். அவர் பேசும் நிலையில் இல்லை. காது,மூக்கு, தொண்டை பகுதிகளில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. மூச்சுதிணறல் இருந்தது. உடனே அவருக்கு உயிர்காக்கும் சிகிக்கை அளிக்கப்பட்டு மயக்க மருத்துவர் மற்றும் நரம்பியல் மருத்துவர் ஆகியோரின் கருத்துரை பெறப்பட்டு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது. சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார். அவரது சிகிச்சைக்கான ஆவணம்

**அ.சா.ஆ 16**. அவரது இறப்பு குறித்த இறப்பு தகவல் **அ.சா.ஆ 17.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி நோயாளி எங்கள் மருத்துமனையில் அனுமதிக்கப்படும்போது விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்த விபத்து பதிவேட்டில் நோயாளிக்கு எப்போது, எங்கு, எதனால் காயம் ஏற்பட்டது என்பது குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் முதலில் கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டு எண் குறிப்பிடப்பட்டிருக்கும். நான் பார்த்தபோது நோயாளி எந்த நிலையில் இருந்தாரோ அந்த நிலையில் இருக்கும் ஒரு நோயாளியை வேறு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கமாட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் திருச்செந்தூர் மருத்துவமனையில் அவர் எந்த நிலையில் இருந்தார் என்று எனக்குத் தெரியாது. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகலை நான் பார்க்கவில்லை. ஏனென்றால் நான் சிகிச்சை அளித்த மருத்துவர். நோயாளியை மருத்துவமனையில் அனுமதித்த மருத்துவர் அதை பார்த்திருப்பார். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் நோயாளிக்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நோயாளியின் காயம் குறித்து விபத்து பதிவேட்டு நகலில் நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சிகிச்சை மட்டுமே அளித்தேன். அ.சா.ஆ 16 ஆவணம் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ 16 ல் ஆயுதம் பற்றி சொல்லப்படவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.26 18:23:05 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.